# தேவனுடைய சர்வாயுத வர்க்கம் (6:13-18)

*நமது காவலை வீழ்த்தி நம்மைப் பிடிப்பதற்காகச் சாத்தான் வாய்ப்புக் களைத் தொடர்ந்து தேடி வருகின்றான். சாத்தான் கருணையற்றவனாக இருக்கின்றான். நமது முந்திய பாடத்தில் நாம் அவன் நம்மீது எவ்வாறு யுத்தம் தொடுக்கின்றான் என்று கண்டோம். அவன் தன்னால் இயன்ற அளவுக்கு அதிகமான உயிர்களை அழிக்க நாடுவதை விட்டுக் கொடுக்க மாட்டான். சாத்தான் உங்கள் குடும்பத்தின் மிக மோசமான விரோதியாக இருக்கின்றான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அவனுடைய தாக்கு தலுக்கு உங்களைத் தயார் படுத்திக் கொள்ளுங்கள். அது வரும், மற்றும் அது நீங்கள் உயிரோடிருக்கும் வரைக்கும் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கும்.*

*இது எபேசியருக்குப் பவுலின் கடைசி அறிவுறுத்துதல்களின் அவசரத் தன்மையை விளக்குகின்றது:*

> *ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தை யும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங் கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர் களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை யைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச் சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் (6:13-18).*

*நீங்கள் உங்களை எப்பொழுதாவது ஆவிக்குரிய தாக்குதலின் கீழிருக்கக் கண்டதுண்டா? நீங்கள் ஊக்கம் இழந்து அல்லது மனத்தளர்வடைந்து இருந்திருக்கலாம் அல்லது பலமான ஒரு சோதனை தொடர்ந்து இருந்திருக்*

*கலாம். உங்கள் இளம் வயது மகனைப் பற்றி நீங்கள் பிரமிப்புக் கொண்டிருக் கலாம்: அவன் போதைப் பொருட்களைப் பயன்படுத்திப் பார்க்கும்படி அவனது நண்பர்கள் தூண்டிக் கொண்டிருக்கின்றார்களா? அவள் பாலியல் ரீதியாகத் துடிப்புடன் செயல்படும்படி இணங்கச் செய்ய அவள் தோழிகள் அவளிடத்தில் முயற்சி செய்கின்றார்களா? உள்ளூர் சபை பற்றிய விஷயம் என்ன? மனிதர்கள் கருத்து வேறுபாடு கொண்டவர்களாய் இருக்கின்றனர் என்பதினால் மட்டும் கருத்தொருமைப்பாடு இல்லாத நிலை நிலவுகின்றதா அல்லது பிசாசானவன் ஐக்கியத்தை உடைக்க முயற்சி செய்கின்றானா? உங்கள் வாழ்வானது பெருங்குழப்பம் தவிர வேறல்ல என்பது போலவும், நீங்களும் உங்களைச் சுற்றி இருப்பவர்களும் இறங்குமுகமாய்ச் செல்வது போலவும், உங்கள் உலகமானது பிரிந்துள்ளது போலவும் காணப்பட்டால், நீங்கள் ஆவிக்குரிய தாக்குதலின் கீழ் இருக்கலாம். பவுலின் வார்த்தைகளில் உங்களுக்கு நற்செய்தி அடங்கியுள்ளது. நீங்கள் திருப்பியடிக்க முடியும். இதைப் பற்றி நீங்கள் சிலவற்றைச் செய்ய இயலும். நீங்கள் வெற்றியடைய முடியும். இதைப் பற்றி நீங்கள் சிலவற்றைச் செய்ய இயலும். நீங்கள் வெற்றியடைய முடியும்!*

*கிறிஸ்தவர்கள் தேவன்மீதும் அவர் அளிக்கின்ற ஆயுதங்கள் மீதும் சார்ந்திருக்கையில் பிசாசின் தாக்குதல்களை வெற்றிக் கொள்ளுகின்றனர்.*

## யுத்தத்திற்கான ஆயுதங்கள்

*ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஆவிக்குரிய ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. உங்கள் குடும்பம் ஆவிக்குரிய தாக்குதலின் கீழ் இருக்கும் பொழுது துப்பாக்கிகளும், பாதுகாப்பு அமைப்புக்களும் மற்றும் கராத்தே வகுப்புக் களும் உங்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பைத் தராது. ஆவிக்குரிய தாக்குதல் என்பது இயல்பான காணக்கூடிய நமது இந்த உலகத்திற்குப் புறம்பாக உள்ள இன்னொரு வட்டாரத்திற்கு உரியதாக இருக்கிறது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் காணப்படாத, ஆவிக்குரிய சக்திகளுடனான நமது போராட்டத்தைப் பற்றி இருமுறை குறிப்பிட்டார். அதிகாரம் 2ல் பவுல் தம் வாசகர்களுக்கு கிறிஸ்து இல்லாமல் அவர்கள் வாழ்ந்த பழைய வாழ்வைப் பற்றி நினைவூட்டினார்: "அக்கிரமங்களினாலும் பாவங்களினா லும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமை யின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்" (2:1, 2). பவுல் அர்த்தப்படுத்தியது என்ன? அவரது வாசகர்கள் ஒரு காலத்தில், (ஆவிக்குரிய இந்த) பிசாசுடனான யுத்தத்தில் தோல்வியடையும் பக்கத்தில் இருந்தனர்.*

*கிறிஸ்துவுக்குள் நாம் வெற்றியின் பக்கமாக வந்து சேர்ந்திருக்கின்றோம். இது யுத்தம் முடிந்து விட்டதாக அர்த்தப்படுத்துகின்றதா? இல்லை, பிசாசு இன்னமும் இருக்கின்றானே. அவனைப் பற்றிக் கவலைப்படாதிருக்க நான் முடிவு செய்தால், அவன் என்னை வெற்றிக் கொண்டு விடுவான். இருப்*

பினும், நான் தேவனுடைய வசனத்தைக் கவனித்தால், நான் தேவனுடைய பலத்தினிடத்தில் நெருங்கி வந்து பிசாசை தோற்கச் செய்வதற்கு அவருடைய (தேவனுடைய) சர்வாயுத வர்க்கத்தைப் பயன்படுத்த முடியும்.

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தில் உள்ளடங்கியிருப்பவைகள் எவை? ஆறு விஷயங்களைப் பவுல் பட்டியலிட்டார்.

*சத்தியம் என்னும் கச்சையே முதலாவதாக உள்ளது.* "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் ..." (வ. 14அ) NIV வேதாகமத்தில், "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் இடுப்பை சுற்றிக் கட்டிக் கொண்டவர்களாகவும் ..." என்று கூறப்படுகின்றது. பவுலின் நாட்களில் போர் வீரனின் ஆயுதவர்க்கங்களில் அவனது இடுப்புக் கச்சை என்பதும் இருந்தது. இடுப்புக் கச்சை என்பது இரண்டு நோக்கங்களுக்குப் பயன்பட்டது: (1) அணிவகுத்துச் செல்லும் பொழுதோ அல்லது போரிடும் பொழுதோ அவனது இயக்கங்களுக்குத் தடையில்லாத வகையில் அவனுடைய உடைகளைப் பற்றிப் பிடித்துக் கொள்வதற்காக, மற்றும் (2) அவனுடைய பட்டயத்தை சரியான இடத்தில் செருகி வைத்துக் கொள்வதற்காக. ஒரு படைவீரன் தனது இடுப்புக் கச்சையை கட்டிக் கொள்கின்றான் என்றால், அவன் யுத்தம் செய்யத் தயாராயிருக்கின்றான் என்று அர்த்தப் படுகின்றது. இது வேலையைச் செய்ய தன்னம்பிக்கையுடன் இருத்தலை அறிவிக்கின்றது.

பிசாசானவனை நாம் எதிர்த்து நிற்கின்ற பொழுது, அச்செயலை நாம் தன்னம்பிக்கையுடன் - சத்தியத்துடன் கட்டப்பட்டுள்ள தன்னம்பிக்கையுடன் செய்ய முடியும். சத்தியம் என்பது உபதேசம் மற்றும் நேர்மை ஆகிய இரண்டு விஷயங்களையும் குறிக்கின்றது. நாம் தேவனுடைய வசனத்தை விசுவாசிப்பதோடு கூட, ஒவ்வொரு நாளும் அதன்படியே வாழ உண்மையாகவே நாட வேண்டும். நாம் தேவனுடைய சத்தியத்தை அறிவிப்பதோடு கூட, நமது வாழ்வும் அதைக் காண்பிக்க வேண்டும். சத்தியத்தின் உபதேசம் மற்றும் அதன்படி வாழ்வதில் உண்மைத் தன்மை என்ற இந்த இணைவானது பிசாசுடன் யுத்தம் செய்வதற்குக் கிறிஸ்தவத் தன்னம்பிக்கையையும் ஆயத்த நிலையையும் தருகின்றது. சத்தியத்தை மாத்திரம் அறிவது என்பது போதுமானதல்ல. அதின்படி ஜீவிப்பதில் நாம் நேர்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

*நீதியென்னும் மார்க்கவசம் என்பது ஆயுதவர்க்கத்தின் இரண்டாவது விஷயமாக உள்ளது.* "நீதியென்னும் மார்க்கவசத்தை அணிந்தவர்களாக" (வ. 14ஆ) நாம் உறுதியாக நிலைநிற்க வேண்டும். போர் வீரன் ஒருவனின் மார்க்கவசம் என்பது அவனுடைய உடலின் முன்பகுதியை மூடி, காத்து நிற்கும் ஒரு உலோகத் துண்டாக இருக்கின்றது. தேவன் நமக்கு நீதியென்னும் பாதுகாப்பைக் கொடுத்துள்ளார் என்று பவுல் கூறினார். நீதி என்பது, நாம் தேவனுடன் நிலைநிற்பதை எடுத்துரைக்கின்றது. நாம் பாவம் செய்திருந்தாலும், தண்டனைக்குத் தகுதியானவர்களாயிருந்தாலும், தேவன் கிறிஸ்தவர்களுக்கு நீதியை கிறிஸ்துவுக்குள் அறிவித்துள்ளார். நாம், "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி. 5:21) என்று வாசிக்கின்றோம்.

*நாம் நீதியாக வாழ்வதைத் தேர்ந்து கொள்ளவும் முடியும். நாம் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் வாழ்வதைத் தேர்ந்து கொள்ள முடியும். அந்தத் தேர்ந்து கொள்ளுதலானது ஒவ்வொரு நாளும், நாள் முழுவதும் ஏற்படுத்தப்படும் பொழுது, பிசாசானவன் நமது வழியில் அனுப்புகின்ற எதையும் தவிர்த்துச் செல்ல அது நமக்கு உதவும்.*

*ஆவிக்குரிய பாதரட்சை என்பது மூன்றாவது விஷயமாக உள்ளது. நாம், "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாய்" (6:15) உறுதியாக நிற்கின்றோம். ரோமப் போர்வீரர்கள் திறந்த பாதங்களைக் கொண்ட பாதிக் காலணிகளை அணிந்தனர். அந்தக் காலணிகளின் அடிப்பகுதியில் ஆணிகள் பதிக்கப் பட்டிருக்கும். அவைகள் இன்றைய நாட்களில் கால்பந்து வீரர்களால் அணியப்படும் விசேஷித்த காலணிகளைப் போன்றே பயன்பட்டன. அவைகள் படைவீரர்களுக்கு பாதையில் சரியாக இயங்கப் பயன் பட்டதுடன், அவர்கள் யுத்தம் செய்கையில் தவறி விழுந்துவிடாதபடியும் அவர்களைக் காத்தன. அவர்கள் பெரும்பாலும் ஒருவர் இன்னொரு வருடன், கைப்பிடிச் சண்டை ஆகியவற்றிலேயே போரிட்டபடியால், ரோமப் போர் வீரர்களின் காலணிகள் அவர்களுக்கு அனுகூலம் தந்தன.*

*கிறிஸ்தவர்கள் போராட்டத்தில் வீழ்ச்சியடைவதில் இருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்குத் தேவனிடத்தில் இருந்து சமாதானத்தைப் பெற்றுள்ளனர். முதலாவது, இது தேவனுடன் சமாதானமாக உள்ளது: "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத் தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5:1). நாம் தேவனுடைய சமாதானத்தையும் பெற்றிருக்கின்றோம். இந்த சமாதானமானது எல்லா புரிந்து கொள்ளுதலையும் கடந்து செல்கின்றதாகின்றது. இது, "உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" எல்லாப் புத்திக்கும் மேலாக தேவ சமாதானமாக உள்ளது (பிலி. 4:7). நன்றாயிருக்கும் உணர்வு என்பது தேவனுடன் நெருங்கி நடத்தலி லிருந்து வருகிறது, மற்றும் பிசாசானவன் இதை வெறுக்கின்றான். அவன் நம்மைப் பெரும் குழப்பத்தில் வைத்திருக்கவே - நாம் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறித்தும், நமது நியமனப் பணிகளைக் காத்துக் கொள்வது குறித்தும் நம்மைக் கவலையில் ஆழ்த்தி வைத்திருக்க, சுகவீனங் கள் குறித்து சஞ்சலப்பட வைக்க, நிகழ்த்த வேண்டிய பணிகள் குறித்த மன அழுத்தத்தில் நம்மை கவிழ்த்துப் போட, மற்றும் உணர்வுப்பூர்வமாக களைப்படையச் செய்யவே - விரும்புகின்றான். பிசாசானவன் நமது அமைதியைக் களவாட விரும்புகின்றான். போராட்டத்தை எதிர் கொள்ளுகையில் தேவனிடமிருந்து சமாதானத்தைப் பெறுவது எப்படி என்று கிறிஸ்தவர்கள் அறிந்துள்ளதைக் காணுதல் என்பது அவனை ஊக்கம் குறையச் செய்கிறது.*

*விசுவாசத்தின் கேடகம் என்பது நான்காவது விஷயமாக உள்ளது. "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும்*

கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாய் நில்லுங்கள்" (வ. 16). ரோமப் போர்ச் சேவகன் ஒருவனின் கேடயமானது மிகப் பெரிதானதாயிருந்தது. அது ஏறக்குறைய அவனது உயரமும் அகலமும் உடையதாயிருந்தது. அது அவனை முழுமையாக மூடி அவனுக்குப் பாதுகாப்பை அளித்தது, விசேஷமாக, பறந்து வரும் அம்புகளில் இருந்து அவனைப் பாதுகாத்தது. இதைத்தான் நமது விசுவாசமும் நமக்குச் செய்கின்றது. விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு பிசாசின் அம்புகளுக்கு - பயம், சோர்வு, புறக்கணிப்பு, விமர்சனம் மற்றும் அவன் நம்மைப் புண்படுத்துகின்ற எல்லாவற்றிற்கும்—எதிராக அவற்றைப் பயன்படுத்துகின்றது.

சமீபத்தில், கிறிஸ்தவர்களின் ஒரு குழுவினராக தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஒன்றுகூடிப் படித்தோம். எங்களில் ஒவ்வொருவரும் அவரவர் தம் வாழ்வில் அனுபவித்தவற்றின் காரணமாக உரிமைகோரத் தேவையான வாக்குத்தத்தம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்குமானவைகளாக உள்ளன என்று அறிவது ஒரு மாபெரும் உற்சாகமூட்டுதலாக இருந்தது. அவைகள் நம்மைத் தெரிவு செய்து, நாம் இயங்கும்படி காத்துக் கொண்டு, நம்மைப் பொல்லாங்கிலிருந்து பாதுகாக்கின்றது.

*இரட்சணியமென்னும் தலைச் சீரா,* ஆயுதத்தின் ஐந்தாவது பொருளாக உள்ளது. "இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் ... எடுத்துக் கொள்ளுங்கள்" (6:17அ). தலைச் சீரா என்பது, போர் வீரனின் தலையை மரண அடிகளிலில் இருந்து பாதுகாக்கின்றது. தேவனிடமிருந்து நமக்கு வருகின்ற இரட்சிப்பானது, தேவன் நம்மிடத்தில் "நீங்கள் விசுவாசத்தில் நடப்பதைக் காத்துக் கொண்டால், பிசாசானவன் ஒருக்காலும் உங்களுக்கு மரண அடி கொடுக்க முடியாது. அவன் உங்களின் இரட்சிப்பை எடுத்துப் போட முடியாது'' என்று கூறுகின்ற வழியாக உள்ளது. நீங்கள் இரட்சிப்புக்கு உங்களின் முதுகைத் திருப்பிக் காட்ட முடியும், ஆனால் பிசாசானவன் அதை உங்களிடத்திலிருந்து எடுத்துப் போட்டு விட முடியாது. இரட்சிப்பின் தலைச் சீராவை தேவன் உங்களுக்குக் கொடுக்கின்றார். கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிற நித்திய ஜீவனைப் பெறுவோம் என்று தைரியமாயிருக்க முடியும்.

*ஆவியின் பட்டயம்* என்பது ஆறாவது விஷயமாக உள்ளது. தேவனிடத்தில் இருந்து வருகின்ற ஆயுதங்களில் "தேவ வசனமாகிய ஆவியின் பட்டயமும்" (6:17ஆ) உள்ளது. ஆறு ஆயுதங்களில் பட்டயம் மட்டுமே தற்காப்புக்கும் தாக்குதலுக்கும் பயன்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. தேவ வசனம் அப்படிப்பட்டதாக உள்ளது. அது பாதுகாப்பு மற்றும் தாக்குதல் என்ற திறன்களைக் கொண்டுள்ளது. வனப் பகுதியில் இயேசு சாத்தானுடனான தம்முடைய நேரடியான சந்திப்பில் வேத வசனத்தைச் சுட்டிக் காண்பித்தது போல (மத். 4:1-11), நாம் சோதனைகளை எதிர்த்து நிற்பதற்கு (நம்மைப்) பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தேவ வசனத்தைப் பயன்படுத்துகின்றோம். தாக்குதலின்போது, நாம் அவருடைய வசனத்தை சுவிசேஷ ஊழியத்தில் உபயோகிக்கிறோம். சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பலனாயிருக்கிறது (ரோமர் 1:16).

அந்தகாரத்தின் இராஜ்யத்திலிருந்து மக்களை வெளியே கொண்டு வந்து, அவர்களை தேவனுடைய இராஜ்யத்திற்குள் கொண்டு வந்து சேர்க்க நாம் அவருடைய வசனங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம் பிசாசுடன் யுத்தத்தை மேற்கொள்வதற்கு வசனம் நமக்கு உதவுகின்றது.

இந்த ஆறு விஷயங்களும் ஒன்றிணைந்து தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை ஏற்படுத்துகின்றன. தேவன் இவற்றை அளிக்கின்றார், ஆனால் நாம் இவற்றை அணிந்து கொள்ள வேண்டும். நீங்கள் சர்வாயுதவர்க்கத்தை அணிந்திருக்கின்றீர்களா?

தேவனுடன் உண்மையான மற்றும் ஒன்றையும் நமக்கென்று பின் வைத்துக் கொள்ளாத நடையில் இருந்து வருகின்ற தைரியத்துடன் நீங்கள் பிசாசானவனை எதிர்கொள்ளுகின்றீர்களா? நீங்கள் ஏற்படுத்தும்படி தேவன் விரும்புகிறவைகள் என்று நீங்கள் அறிந்துள்ள தெரிவுகளை மேற்கொள்வதற்கு ஒரு அன்றாட ஒப்புக் கொடுத்தலுடன் நீங்கள் பிசாசிடத்தில் போராடுகின்றீர்களா? உங்கள் உணர்வுகளின் மீதான பிசாசின் தாக்குதல்களை நீங்கள் தேவன் தருகின்ற அமைதியான சமாதானத்துடன் எதிர்த்து நிற்கின்றீர்களா? சாத்தான் உங்கள் மீது எறிகின்ற எந்த ஒரு ஆயுதத்தில் இருந்தும் உங்களைக் காத்துக் கொள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைக்கின்றீர்களா? உங்கள் இரட்சிப்பின் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களா? தேவனு டைய வசனத்தை உங்கள் வாழ்வில் பயன்படுத்தும்படிக்கு அதில் அன்றாடம் உங்கள் நேரத்தைச் செலவிடுகின்றீர்களா? நீங்கள் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்திருக்கின்றீர்களா? நாம் போராடுவதற்குத் தேவன் நமக்கு ஆயுதங்களைக் கொடுக்கின்றார்.

## போராட்டத்திற்காக ஜெபம்

தேவன் தம்முடைய மக்களுக்கு அளிக்கின்ற வலிவார்ந்த இன்னொரு ஆதார மூலம் பற்றிப் பவுல் குறிப்பிட்டார். தேவன் தம்முடைய மக்களுக் குப் பின்வருவதைத் தருகின்றார்: "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக் காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (6:18). போராடுவதற்காக ஜெபத்தைத் தேவன் நமக்குக் கொடுப்பதாகப் பவுல் கூறினார். ஏன்? ஏனென்றால் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை அணிந்து கொள்வதற்கு நமக்கு ஜெபம் தேவைப்படுகின்றது. ஜெபம் என்பது நாம் தேவனைச் சார்ந்திருப்பதை விளக்குகின்றது ஜெபிக்கத் தவறுவது என்பது, "எனக்குத் தேவன் தேவையில்லை. அவரின்றியே நான் நன்கு செயல்பட முடியும். நான் சொந்தமாகவே செயல்பட முடியும்" என்று கூறுவதாக உள்ளது. அந்த எண்ணப்போக்கு ஆவிக்குரிய தோல்வியை உத்தரவாதப் படுத்துகின்றது. நம்மில் எவரும், பிசாசுடனான போராட்டத்தில் நமது சொந்த செயல்பாட்டினால் வெற்றி கொள்ள இயலாது. ஜெபம் என்பது நம்மை தேவன் மீது கவனம் செலுத்தும்படி காத்துக் கொள்கின்றது.

*6:18ல் ஜெபம் பற்றிய பவுலின் அறிவுறுத்துதலில் உள்ள "எல்லா" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அவரது வார்த்தைகள், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது வாழ்வில் ஜெபத்திற்கான புரிந்து கொள்ளுதலில் "எல்லா" என்ற வார்த்தையின் பின்வரும் நான்கு பயன்பாடுகளை நோக்கி நமது கவனத்தை இழுக்கின்றது.*

*1. நாம் எல்லா வேளைகளிலும் ஜெபிக்க வேண்டும். பிசாசுக்கெதிராகப் போராடி உறுதியாக நடப்பதில் நாம் ஜெபத்தை அன்றாட ஒழுங்கு முறையாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*2. நாம் எல்லா வகையான ஜெபங்களுடனும் விண்ணப்பங்களுடனும் ஜெபிக்க வேண்டும். நமது வாழ்வில் நடப்பவற்றின்படி, தேவனுடனான நமது செய்தித் தொடர்பில் பல வகைகள் தேவை. நமது சூழ்நிலைகள் நமக்கு அறிக்கையிடுதல், நன்றி செலுத்துதல், பரிந்து பேசுதல், வழிபடுதல், துதித்தல் அல்லது வேறு சில வகையான ஜெபம் ஆகியவை நமக்குத் தேவை என்று அழைக்கலாம்.*

*3. நாம் எப்போதும் விழிப்புடன் ஜெபிக்க வேண்டும். இயேசு கெத்சமெனேயில் ஜெபிக்கையில் சீஷர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். அதுவே மக்களின் போக்காக உள்ளது. நாம் ஜெபிக்க வேண்டிய வேளையில் உறங்குகின்றோம் அல்லது அவசரத் தேவைக்கான நமது உணர்வை இழந்து போகிறோம்.*

*4. நாம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். பிசாசுடனான நமது போராட்டத்தில் நாம் ஒன்றுகூடி ஊழியம் செய்வதைக் காண வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். ஒருவர் பிறருக்காக ஜெபிக்கின்ற ஒன்றுபட்ட (தேவனுடைய) குடும்பம் சாத்தானின் தாக்குதலுக்கு எதிராகப் பலத்துடன் நிலைநிற்க முடியும்.*

*ஆண்டுகளினூடே நான் ஜெபிப்பதில் நடந்து கொள்ள வேண்டிய பிரகாரம் நடக்க என்னை ஒழுங்கு படுத்திக் கொள்வதற்குப் போராடியிருக்கின்றேன். மற்ற கிறிஸ்தவர்கள் ஜெபித்தலில் தங்கள் சொந்தத் தோல்விகளை என்னுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். ஜெபம் என்று வருகின்ற போது நாம் ஏன் குறைவு படுகின்றோம்? பல காரணங்களை நாம் நினைக்க முடியும் என்று நான் யூகிக்கின்றேன், ஆனால் தேவனை விரும்புதல் என்ற புத்தகத்தில் ஜான் பைப்பர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது என்ன என்பதை நாம் இங்கு கண்ணோக்குவோம்:*

> *நான் தவறாகக் குறிப்பிடாத பட்சத்தில், தேவனுடைய பிள்ளைகளில் பெரும்பாலானோர் குறிப்பிடத்தக்க ஜெப வாழ்வைக் கொண்டிராததற்குக் காரணம் நாம் அதை விரும்புவதில்லை என்பதல்ல, ஆனால் நாம் அதற்குத் திட்டமிடுவதில்லை என்பதே ஆகும். நீங்கள் நான்கு வாரங்கள் விடுமுறையில் கழிக்க விரும்பினால், திடீரென்று ஒரு கோடைக்கால நாளின் காலைப் பொழுதில் எழுந்து, "ஏய்! இன்று நாம் கிளம்பிச் செல்லலாம்!" என்று கூறமாட்டீர்கள் தானே? ஏனென்றால், நீங்கள் ஏதொன்றையும் ஆயத்தப்படுத்தாமல் இருக்கிறீர்கள் அல்லவா! நீங்கள் எங்கே செல்ல வேண்டும் என்று அறியவில்லை. ஏதொன்றும் திட்டமிடப்படவில்லையே!*

*ஆனால், நம்மில் பலர் ஜெபித்தல் என்பதில் இவ்வாறே நடந்து கொள்கின்றோம். நாம் ஒவ்வொரு நாளும் எழுந்து நமது வாழ்வில் ஜெபவேளை என்பது குறிப்பிடத்தக்கதாக இருக்க வேண்டும் என்று உணருகின்றோம், ஆனால் எப்பொழுதும் ஒன்றும் தயாராக இருப்பதில்லை. நாம் எங்கு செல்ல வேண்டும் என்று அறிவதில்லை. ஒன்றும் திட்டமிடப்பட்டிருப்பதில்லை. நேரம் இல்லை. இடமும் இல்லை. முறையான செயல்கள் எதுவும் இருப்பதில்லை. மற்றும், ஜெபத்தில் திட்டமிடுதலுக்கு எதிர்மறையான செயலானது ஆழமாகப் பாய்ந்தோடுகின்ற, தானாக எழும்புகின்ற அனுபவங்களாக இருப்ப தில்லை என்று நாம் யாவரும் அறிந்திருக்கின்றோம். திட்டமிடுதலுக்கு எதிர்மறையான செயலானது பள்ளம் போன்றதாக உள்ளது. நீங்கள் விடுமுறை ஒன்றிற்குத் திட்டமிடவில்லையென்றால், அநேகமாக நீங்கள் வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்! இயல்பாகத் திட்டமிடப்படாத ஆவிக்குரிய வாழ்வின் ஓட்டமானது வலிவார்ந்த தன்மை மிகவும் ஆழத்தில் மூழ்கிவிடும் நிலை என்பதாக உள்ளது. ஓட வேண்டிய ஓட்டமும் போராட வேண்டிய யுத்தமும் உள்ளது. உங்கள் ஜெப வாழ்வில் புதுப்பித்தல் தேவையென்றால், அதைக் காண நீங்கள் திட்டமிட வேண்டும்.*

*ஆகையால், எனது எளிய புத்திமதி பின்வருமாறு: நமது முன்னுரிமைகளையும் அவற்றில் ஜெபம் எவ்வாறு பொருந்துகிறது என்பதையும் இன்றே திரும்பவும் நினைத்துப் பார்க்கச் சற்றே நேரம் செலவிடுவோம். சில புதிய தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள். தேவனுடன் சில புதிய செயல் திட்டங்களை முயற்சி செய்யுங்கள். நேரம் ஒதுக்குங்கள், இடத்தை ஒதுக்குங்கள். உங்களை வழிநடத்த வேதவசனத்தின் பகுதியொன்றைத் தேர்ந்து கொள்ளுங்கள். மும்முரமான வேலை நாட்கள் உங்கள் மீது கொடுங்கோன்மை செலுத்த அனுமதிக்காதீர்கள். வாழ்வின் ஓட்டத்தின் இடையில் நம் யாவருக்கும் திருத்துதல்கள் தேவைப்படுகின்றது. இன்றைய நாளை ஜெபத்திற்குத் திரும்பும் நாளாக்குங்கள் - இதை தேவனுடைய மகிமைக்காகவும் உங்கள் சந்தோஷத்தின் நிறைவிற்காகவும் செய்யுங்கள்.*[1]

## முடிவுரை

*பிசாசுக்கு எதிராகப் போராடுவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுவீர்கள்? உங்கள் குடும்பம் ஆவிக்குரிய தாக்குதல்களில் கீழ் வருகின்ற பொழுது அதை(குடும்பத்தை)ப் பாதுகாக்க நீங்கள் என்ன செய்வீர்கள்? அந்தகாரத்தின் சக்திகளுக்கு எதிராக "முடிவு பரியந்தமான இந்தப் போராட்டத்தில்" சக கிறிஸ்தவர்களுக்கு நீங்கள் எவ்விதத்தில் உதவ முடியும்?*

*அப்போஸ்தலரின் வார்த்தைகளில் நீங்கள் உங்கள் பதிலைக் கண்டறிய முடியும்:*

*ஆயத்தமாயிருங்கள். நீங்களாகவே கையாள முடிவதற்கு அதிகமான வற்றின் ஒன்றிற்கெதிராக நீங்கள் இருக்கின்றீர்கள். எல்லாம் முடிந்த பின்பு உங்கள் காலடியில் இன்னும் வெற்றிக் கூக்குரல் இருக்கும்*

படிக்கு, தேவன் கொடுத்திருக்கின்ற ஒவ்வொரு ஆயுதத்திலிருந்தும் உங்களால் இயன்ற அளவுக்கு எல்லா உதவியையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், மற்றும் இரட்சிப்பு ஆகியவை (வெறும்) வார்த்தைகளை விட மேலானவை களாக உள்ளன. அவற்றை எவ்வாறு பயன்படுத்துவதென்று கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய வாழ்வு முழுவதும் இது உங்களுக்குத் தேவை. தேவனுடைய வசனமானது இன்றியமையாத ஆயுதமாக உள்ளது. அதே போன்றே, தொடர்ந்து நடக்கின்ற இந்த யுத்தத்தில் ஜெபமும் மிகவும் இன்றியமையாததாக உள்ளது. வலுவாக நீண்ட நேரம் ஜெபியுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளுக்காக ஜெபியுங்கள். உங்கள் விழிகளைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். எவரொருவரும் பின்னால் வீழ்ந்து போகாதபடி அல்லது வெளியேறிவிடாதபடி ஒவ்வொருவரும் பிறருடைய ஆவிகளைக் காத்துக் கொள்ளுங்கள் *(6:13-18;* TM*).*

---

குறிப்பு

[1]John Piper, *Desiring God* (Portland, Oreg.: Multnomah, 1986), 150-51, quoted by R. Kent Hughes, *Ephesians: The Mystery of the Body of Christ* (Wheaton, Ill.: Crossway Books, 1990), 257-58.